**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

**இந்த ஆண்டும் இதை விட்டுவையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன், அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி; இல்லையானால் இதை வெட்டிவிடலாம்.**

(லூக் 13:8-9)

நம்முடைய கிறிஸ்துவ சமூக வாழ்வு, ஒவ்வொரு நிலையிலும் கடவுளின் வழித்துணையோடு, வலிமையூட்டப்பட்டு, அங்கீகரிக்கப்படுகிறது.

திருஅவையின் மறைத்தூது செயல்நடவடிக்கைகளில் நாம் பங்கேற்பதைப் பற்றி விவாதிக்கும்போது, பங்கெடுப்போரின் எண்ணிக்கை பத்து விழுக்காட்டிற்கும் குறைவாக இருக்கும்; அல்லது ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்ற கருத்து உண்டு. எந்தவொரு உருவாக்கப் பயிற்சிகளிலும் ஆண்களின் எண்ணிக்கை 5 பேருக்கு ஒன்று என்ற விகிதத்திலேயே இருக்கும். நாம் திருஅவையின் மறைத்தூது என்னும் இயல்பை ஒருவேளை மறந்துவிட்டிருக்கலாம் அல்லது ஒருவேளை நமது இன்றைய நவீன சுயநலமான வாழ்க்கைமுறை, பொருளீட்டுதலில் கூடுதல் கவனம், குறிப்பாக குடும்ப வாழ்க்கையைவிட மற்றவைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவதும் கூட காரணங்களாக இருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை நாம் ஒப்புகொள்ளாதவரை, நாம் ஒருவரையொருவர் அலட்சியப் படுத்திக்கொண்டும் மற்றவர்களைவிட நம் சுய ஆசைகளுக்கு அதிக முன்னுரிமை கொடுத்துக்கொண்டும் அடிப்படையாக கடவுள் என் வாழ்வில் இல்லை என்பதுபோல் நடக்கும்போதும், நாம் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படை உண்மையையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. கடவுளின் நற்செய்தியை அறிவிக்கும் கருவிகளாக நம்மை நாம் அனுமதிக்கவில்லையென்றால், நாம் உண்மைச் சாட்சிகளாவும் இருக்கமுடியாது. வறண்ட நிலத்தில் அவரின் போதனையைக் கேட்க வந்த இஸ்ரயேல் மக்கள் உணவின்றி தவித்தபோது, இயேசு அவர்களின் பசியை அற்புதமாகத் தீர்த்தார். இருந்தபோதும், அவர்கள் கடவுளுக்கு உகந்தவர்களாய் நடக்கவில்லை. பலநேரங்களில் நாமும் இன்னும் காலம் இருக்கிறது என்று நம்முடைய அன்புக்குரியவர்களுக்கும், நம்முடைய சொந்த வேலைகளுக்கும் அதிக முன்னுரிமை கொடுத்துக்கொண்டு, " நமக்கு அடுத்திருப்பவர் யார்"? என்பதை மறந்துவிடுகிறோம். நாம் ஏற்றுக்கொள்கிறோமோ இல்லையோ எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரயேலின் முதல் தலைமுறையிலிருந்து யோசுவா மற்றும் காலேப் மட்டும்தான் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் சென்றார்கள் என்பதை நம் கவனத்தில் கொள்ளவேண்டும்.(எண்:14:30)

கடவுள் நம்முடன் இருக்கிறார்; இப்போது நமக்குள்ளும் இருக்கிறார். பிறருக்காக கிறிஸ்துவைப் போல் நாமும் வார்க்கப்படவும். பிறருக்காக கிறிஸ்துவாக வெளிப்பட உள்ளார்ந்த மாற்றம் பெறவும் எத்தனையெத்தனை இறைவேண்டல்கள் தேவை. நம்மை இன்னும் சீராக்கிக்கொள்ள பல படிநிலைகள் தேவை. திறந்த உள்ளம் நமக்குத் தேவை என்பதற்காக இறைவேண்டல் செய்வோம். சீரமைக்கப்படும் மரங்களைப் பாருங்கள். முடிவில் அவை மாட்சியடையும்படி நல்ல கனிகளைக் கொடுக்கும்.

**இன்றைய வாசகங்கள்:**

விப: 3: 1-8, 13-15;
திபா:103: 1-4, 6-8, 11;
1 கொரி: 10:1-6, 10-12;
லூக்கா 13:1-9.

INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2022
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

20 மார்ச் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் - தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**




# சீராக்கிக்கொள்ள திறந்த மனதோடு இருங்கள்

நம்முடைய சமூகத்தில் நிகழ்ந்த மனமாற்றத்தின் கதைகள் கிறிஸ்துவின் பல குணநலன்களை நம்மிடையே வெளிப்படுத்துகின்றன. ஏனென்றால் இந்த தனிநபர்கள் தங்களைக் கடவுளின் கருவிகளாக செயல்பட அனுமதித்தனர். துயரமும் சோகமும் நிறைந்த நாட்களில் இவர்கள் நம்பிக்கை மற்றும் வலிமையூட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தனர். இவை கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதை தொடர்ந்து நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன, உலகில் தற்பொழுது பரவிக்கொண்டிருக்கும் நிலையற்ற வாழ்க்கை முறையில் ஒவ்வொரு திருப்பலியிலும் குருவானவர் செய்யும் இறைவேண்டலை நாம் தொடர்ச்சியாக நினைவுக்குக் கொண்டு வருவோம். இந்த இறைவேண்டல் நமக்கு இறைஆர்வத்தையும், பிரமிப்பு உணர்வையும் தூண்டுகிறது.